முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1128

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

31.10.2022, திங்கட்கிழமை

1. தவபலம் கொண்ட ராஜனே
தரணியில் அற்புதம் நிகழ்த்திடும்
அவதார எந்தன் ஆறுமுக ஞானியே
அரங்கன் உமக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
உரைத்திடுவேன் சுபகிருது துலை திங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 14 ம் நாள் 31.10.2022 திங்கட்கிழமை)
ஞானவான் உன் சக்தி கொண்டுதான்
ஞாலமதில் ஞானிகளின் ஆட்சிக்காலம்
3. காலமதும் உன் தவ பூர்த்தியாகவே
கண்டுரைப்பேன் உலக மக்களிடை சித்தியாக மாறி
அவனியில் அரங்கன் உன் வழி உருவாகும்
ஆற்றல்மிக்க ஞானவான்கள் படை
4. படைதானும் ஞானிகளாக மாற்றம் கண்டு
ஞாலமதை ஞான ஆட்சிக்கு தேற்றம் தரும்
தருகின்ற அற்புதத்தை தவசி உந்தனுக்கு
தணிகாசலன் யான் நித்தம் நித்தம் வரமாக
5. அருளியே காத்துவர அப்பனே
உன் உபதேச ஞானமே அகிலத்தை மாற்றும் வேதமாகும்
ஒப்புகொண்டு வந்தவர்கள் எல்லாம்
உலகில் ஞானிகளாக உருவெடுத்து
6. உருவெடுத்து அரங்கன் நீ விரும்புகின்ற
உயர்வான உலக மாற்றத்தை
தருவரப்பா ஞான ஆட்சிக் காலமாக
தவசிகளெல்லாம் நிரம்பிய புண்ணிய பூமியாக
7. ஆகவே உலகம் மாற்றம் கண்டு
அரங்கன் அவதாரத்தின் நோக்கம் பூர்த்தியாகும்
ஆறுமுகப் பெருமான் யான்
அருளிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–